DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.304/2019**

**P.W.3**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | மகேஸ்வரி |
| Husband Name | : | வெங்கடேசன் |
| VILLAGE | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.08.2023

( 1. 2 எதிரிகள் ஆஜர். )

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது திருமங்கலம் தாலுகா காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிகிறேன். வழக்கு சமயத்தில் திருமங்கலம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியில் இருந்தேன். ஆஜர் எதிரிகளை பார்த்திருக்கிறேன். அசா-1 சுருளிமலை, அசா-2 கோபாலகிருஷ்ணன் ஆகியோரை தெரியும். 2016 திருமங்கலம் சட்டமன்ற தேர்தலின் போது பறக்கும்படை குழுவில் நான் பணியில் இருந்தேன். 22.03.2016 ம் தேதி சோழவந்தான் - திருமங்கலம் ரோட்டில், செக்கானூரணியை தாண்டி தேங்கல்பட்டியிலுள்ள ஒரு பெட்ரோல் பல்க் அருகே வாகன தணிக்கை செய்த போது, சோழவந்தானிலிருந்து செக்கானூரணியை நோக்கி TN 57 AL 3586 என்ற Bolero Max வண்டி வந்தது. அசா-1 தலைமையில் மேற்படி வாகனத்திற்கு வாகன தணிக்கை செய்தார். அப்போது அந்த வாகனத்தில் ஆஜர் எதிரிகள் இருவரும்

வாகனத்தில் இருந்தார்கள். வாகனத்தை அசா–1 திறக்கச்சொல்லி பார்த்தார். வாகன்திற்குள் 1200 ஜெலடின்களும் 700 டெட்டனேட்டர்களும் இருந்தன. அசா–1 அதற்கான ஆவணங்களை கேட்டார். கையாள்வதற்கான நபர்கள் யாராவது உடன் வந்துள்ளார்களா என்று கேட்ட போது யாரும் வாகனத்தில் இல்லை என்று பதில் சொன்னார்கள். தேர்தல் நேரம் என்பதால் ஏதேனும் அசம்பாவிதம் ஏற்படும் என்று கருதி மேற்படி வாகனத்தை செக்கானூரணி காவல் நிலையத்திற்கு கொண்டு சென்றோம். இது சம்பந்தமாக அசா–1 புகார் கொடுத்தார். என்னை காவல் ஆய்வாளர் விசாரணை செய்தார்.

எதிரிகள் தரப்பு கு,வி –

வாகன சோதனையில் நாங்கள் இருந்த போது, எங்களுடன் வீடியோ படம் எடுப்பவர் உடன் இருந்தார் என்றால் சரிதான். இ வண்டியை சோதனையிடும் போதும் அந்த நபர் வீடியோ எடுத்தார். பெட்ரோல் பல்க் அருகே டீக்கடை, வீடுகள் இருந்தன என்றால் கடை இருந்தது. பெட்ரோல் பல்க்கிலும் கடையிலும் ஆட்கள் இருந்தார்கள். எத்தனை மணிக்கு மேற்படி இ வாகனத்தை சோதனை செய்ய ஆரம்பித்தோம் என்ற விவரத்தை போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை. வெடிபொருட்கள் தனித்தனி அட்டை பெட்டிகளில் இருந்தது. அட்டை பெட்டியில் தயாரிப்பாளர் பெயர், தேதி போன்ற விவரங்கள் இருந்ததா என்று எனக்கு தெரியாது. சம்பவயிடத்திற்கு செக்கானூரணி ஆய்வாளரும் சார்பு ஆய்வாளரும் வந்துவிட்டார்கள் என்றால் சரியல்ல, நாங்கள் காவல் நிலையம் சென்றபின் தான் அசா–1 யை அழைத்துகொண்டு சம்பவயிடத்திற்கு வந்தார்கள். ஆய்வாளர் என்னை விசாரிக்கும் போது 13.30 மணிக்கு வாகனத்தை கைப்பற்றியதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். ஆய்வாளர் என்னை விசாரிக்கும் போது 2ம் எதிரியை பற்றி குறிப்பிடும் போது திண்டுக்கல் மாவட்டம், பெரியகடை வீதியை சேர்ந்த என்று முகவரியை பற்றி சொல்லியிருக்கிறேன். கைப்பற்றப்பட்ட வெடிபொருட்களுடன் கைப்பற்றப்பட்ட வாகனத்துடன் அசா–1 காவல் நிலையத்திற்கு கொண்டு வந்து ஆஜர்படுத்தினார் என்றால் சரிதான்.

அந்த வாகனம் காவல் நிலையத்திற்கு வெளியே தான் நிறுத்தப்பட்டிருந்தது. நான் காவல் நிலையத்திற்கு உள்ளே போனேன். நான் காவல் நிலையத்திற்குள் போனதாவவோ, அசா–1 செக்கானூரணி காவல் நிலையத்திற்கு போனதாகவோ ஆய்வாளர் என்னை விசாரித்த போது நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அசா–1 சொல்ல சொல்ல புகாரை நான் தான் எழுதினேன். அசா–1 சொல்ல சொல்ல நான் புகார் எழுதியதாக ஆய்வாளர் விசாரணையின் போது சொல்லவில்லை என்றால் சரிதான். நான் எழுதியதாக சொல்லப்படும் புகாரில் நான் சாட்சி கையொப்பம் இடவில்லை என்றால் சரிதான். அந்த புகாரை நான் எழுதவில்லை என்றும் புகாரை எழுதியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அசா–1 புகாரை சார்பு ஆய்வாளரிடம் கொடுத்தார். அப்போது DSP, காவல் ஆய்வாளர் காவல் நிலையத்தில் இருந்தார்கள் என்றால் DSP இல்லை, ஆய்வாளர் இருந்தார். சார்பு ஆய்வாளர் வெடிபொருட்களை சரிபார்த்துவிட்டு புகாரை வாங்கினாரா அல்லது புகாரை வாங்கிவிட்டு வெடிபொருட்களை சரிபார்த்தாரா என்று சரியாக ஞாபகமில்லை. தேங்கல்பட்டியில் சோதனை செய்ததாக ஆய்வாளர் விசாரணையின் போது குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரிகள் இருவரும் வாகனத்தில் இருந்ததாக ஆய்வாளர் விசாரணையின் போது சொல்லவில்லை என்றால் சரிதான். முதல் முறையாக நீதிமன்றத்தில் அவ்வாறு சொல்கிறேன் என்றால் சரிதான். அசா–1 ஆவணங்களை கேட்ட போது, வாகனத்தின் ஓட்டுனர் ஆவணங்களை எடுத்து காட்டினார்கள், அதை அசா–1 வாங்கிக்கொண்டாரா என்று எனக்கு தெரியாது. ஆய்வாளர் விசாரித்த போது வெடிபொருட்களை கையாளும் நபர் இருக்கிறாரா என்று கேட்டதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எந்த தேதியில் நாங்கள் வாகன சோதனையில் ஈடுபட்டோம் என்று ஆய்வாளர் விசாரணையின் போது குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆய்வாளர் கேட்கவில்லை, நான் சொல்லவில்லை. ஆய்வாளர் என்னை விசாரிக்கும் போது நான் திருமங்கலம் நகர் காவல் நிலையத்தில் சார்பு

ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்று சொல்லவில்லை. ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலமே பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எந்த சம்பவமும் நடக்கவி்ல்லை என்றால் சரியல்ல. நாங்கள் மேற்படி வாகனத்தை சோதனை செய்வதற்கு முன்பு மற்றொரு இ வாகனத்தை சோதனை செய்தோம் என்றால் சரியல்ல. 2ம் எதிரி சம்பவயிடத்திலேயே இல்லை என்றும் வாகனத்தில் அமர்ந்திருந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் சொல்லும் 2வது நபர் வெடிபொருட்களை கையாளும் நபர் என்றால் சரியல்ல.